# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 21.11.2019 | | **2019**ம் ஆண்டு நவம்பர் மாதம் **21–**ம் தேதி வியாழக்கிழமை மாலை **05.00** மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க அவசரக் கூட்டம் நடைபெறும்.<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 21.11.2019 | 422 | **பொருள் எண். 1**<br>சொத்துவரியினை 01.04.2018 முதல் சீராய்வு செய்திட வெளியிடப்பட்ட அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, நாள்.26.08.2018 ஆகியவைகளை நிறுத்தி வைத்து, சொத்துவரி சீராய்விற்கு முந்தைய சொத்துவரியினையே வசூலித்திடவும், சொத்துவரி சீராய்வு குறித்து அரசு செயலாளர் நிதித்துறை அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின்பேரில் அரசினரால் சொத்துவரி சீராய்வு குறித்து முடிவு செய்யப்படும் என வெளியிடப்பட்ட அரசாணை எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (M A -IV) துறை, நாள்.19.11.19 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** பதிவு செய்யலாம். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.11.2019ம் தேதிய சுற்றறிக்கை ந.க.40032/2012/ஆர்1-ல் குறிப்பிட்டவாறு சொத்துவரி மண்டலங்கள் பகுப்பாய்வு (Zone rate) மற்றும் 2017-18ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சொத்துவரி மற அளவீடுகள் (Under Assessed and Buildings with Changes in usage ) ஆகியவைகளையும் நிறுத்தி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளதையும் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண். 1315/2019/அ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 21.11.2019 | 423 | **பொருள் எண். 2**<br>துவாக்குடி நகராட்சிப்பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் – 2019-2020–ம் ஆண்டு நிதியின் கீழ் பாரதியார் தெரு, ஆனந்த நகர்(வ.உ.சி நகர்), என்.ஜீ.ஓ காலனி மெயின் மற்றும் குறுக்கு தெரு, அம்பேத்கார் தெரு மற்றும் புத்தர் தெருக்களில் தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள **15.11.2019** அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கான தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid)-ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 18.11.2019 அன்று (Price Bid) விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் | சிப்பம் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின்படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. எம். பொன்னுசாமி, எண்.43, IAS நகர், திருவெறும்பூர், திருச்சி. | 84,19,206.00 | 88,39,171.68 | 4.99% கூடுதல் |
| 2 | திரு. கே. ஜெயராமன், 7ஏ, பாஸ்ட் ஆபிஸ் தெரு, மேலகல்கண்டார் கோட்டை, திருச்சி | | 90,33,078.75 | 7.29% கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் விலைகுறைப்பு செய்து தருமாறு குறைவான ஒப்பந்த விகிதம் அளித்திருந்த ஒப்பந்ததாரர் திரு. எம். பொன்னுசாமி, என்பவரிடம் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டதற்கிணங்க விலைக்குறைப்பு செய்தபின் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறாகும்.

| வ.எ. | ஒப்பந்ததாரர் பெயர் | சிப்பம் தொகை ரூ. | விலை குறைப்புக்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | விலை குறைப்புக்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|
| 1 | திரு. எம். பொன்னுசாமி, எண்.43, IAS நகர், திருவெறும்பூர், திருச்சி. | 84,19,206.00 | 88,39,171.68 (4.99% மதிப்பீட்டைவிட கூடுதல்) | 88,17,445.68 (4.73% மதிப்பீட்டைவிட கூடுதல்) |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி விலை குறைப்பு செய்தபின் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1.மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் திரு. எம். பொன்னுசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையிலிருந்து 4.73% கூடுதலாக கொடுத்துள்ளார். இக்கூடுதல் சதவீதமானது அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்கு 5%-க்குள் உள்ளதாலும், மேலும் இப்பணி திட்டப்பணி என்பதாலும் மன்றம் ஏற்கலாம்.

2. அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகையை விட கூடுதலாகும் தொகையை

<table>
<tr><td></td><td></td><td>நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>ந.க. எண். 1009 /2019/ இ1</td><td></td></tr>
<tr><td>21.11.2019</td><td>424</td><td><u>பொருள் எண். 3</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட இரண்டு வாகனங்களுக்கு வாகன காப்பீடு முடிவடைவதால் மேலும், ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்து அதற்கான தொகையையும், மேலும் குப்பை லாரி TN45 AY0474 / TIPPER LORRY இயக்க காலம் (Fc) முடிவடைந்துவிட்டபடியால் தற்போது பழுதுபார்க்கும் பணி வண்ணம் பூசுதல் போன்ற பணிகள் மேற்கொண்டதால் மேலும் ஓராண்டுக்கு இயக்க காலம் (Fc) புதுப்பிக்கலாம்.அதற்கான செலவினத்தையும் மேற்கொள்ளலாம்.
<table>
<tr><th>வ.எண்</th><th>வாகனத்தின் விவரம்</th><th>புதுப்பித்தல் கட்டணம்</th><th>காப்பீடு முடிவடையும் நாள்</th></tr>
<tr><td>1</td><td>TN45 AY0474 / TIPPER LORRY</td><td>30745/-</td><td>26.11.2019</td></tr>
<tr><td>2</td><td>TN45 BY4097 / DUMPER PLACER</td><td>32362/-</td><td>16.11.2019</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>63107/-</td><td></td></tr>
</table>
மேற்காணும் இரண்டு வாகனங்களுக்கு வாகன காப்பீடு UNITED INDIA INSURANCE COMPANY LTD.,இருந்து கேட்பு வரப்பெற்றுள்ளது. எனவே, இரண்டு வாகனங்களுக்கும் வாகன காப்பீடு தொகை மற்றும் புதுப்பித்தல் ஆகியவை மேற்கொள்வதற்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.70000/- ஆகும். உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- வாகன காப்பீடு புதிப்பித்தல் மற்றும் இயக்க காலம் (Fc) செய்யும் தொகையினை அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1461 / எச்1/2019</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>21.11.2019</td><td>425</td><td><u>பொருள் எண். 4</u><br>துவாக்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டம் - திடக்கழிவு மேலாண்மை பணிகளை பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கீழ்காணும் பொருட்களில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு IEC ACTIVITIES மூலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்கள் ந.க.எண் இ2/8576/2017 நாள் 19.06.2019-ன் படி, துவாக்குடி நகராட்சிக்கு ரூ.2,26,500/- ஒதுக்கீடு செய்துள்ளார்கள் அதன்படி</td><td></td></tr>
</table>

**<u>பொருள் விவரம்–</u>**

| | |
|---|---|
| 1 | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டும் திட்டம் |
| 2 | திறந்த வெளியில் மலம் கழித்தால் ஏற்படும் தீமைகள் |
| 3 | திடக்கழிவு மேலாண்மை திட்டம்– குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் |
| 4 | டெங்கு காய்ச்சல் மற்றும் பன்றிக்காய்ச்சல் நோய் தடுப்பு |
| 5 | பொது சுகாதாரம் மற்றும் பரவக்கூடிய நோய்கள் தடுக்கும் முறை |
| 6 | பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பாக |
| 7 | சொத்துவரி, குடிநீர் கட்டணம் செலுத்துதல் தொடர்பாக. |

நிகழ்ச்சிகள் நடத்திக் கொடுப்பதற்கு கீழ்கண்டுள்ள இரண்டு நாடக குழுக்கள் ஒப்பந்தப்புள்ளிகள் அறித்துள்ளனர்.

| வ. எண் | கிராமிய கலைக்குழுவின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | தென்னகத்து கலைத்தென்றல் , கிராமிய கலைக்குழு, நிகழ்ச்சி ஒன்றுக்கு | ரூ.6000/- |
| 2 | நியூ இந்திய கலைக்குழு, நிகழ்ச்சி ஒன்றுக்கு | ரூ.6400/- |

இவ்விரு கிராமிய கலைக்குழுக்கள் 13.11.2019ல் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தென்னகத்து கலைத்தென்றல் , கிராமிய கலைக்குழு நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.6000/- ஏற்றுக் கொள்வது தொடர்பாக நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** குறைவான விலைப்புள்ளி அளிக்கப்பட்டுள்ள தென்னகத்து கலைத்தென்றல் , கிராமிய கலைக்குழுவின் விலைப்புள்ளியை ஏற்று நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு உத்தரவு வழங்கி அதற்கான தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1226 / எச்1/2019**

---

**21.11.2019**

**426**

**<u>பொருள் எண். 5</u>**

துவாக்குடி நகராட்சி பகுதியில் பொது நிதி **2019–20 –**ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **15.11.2019–**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக் கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|

| | | | பெயர் | |
|---|---|---|---|---|
| 1 | 1–வது வார்டு செல்லாயிஅம்மன் கோவில் முதல் உடையான்குளம் கிழக்கு பகுதி வரை தார்சாலை அமைத்தல். | 9.00 | எம். பொன்னுசாமி<br><br>கே. ஜெயராமன் | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.92 % அதிகம் |
| 2 | 1–வது வார்டு சோழிஸ்வரர் (சிவன்) கோவில் முதல் அங்காளம்மன் கோவில் தெரு (உடையான்குளம் தெற்கு பகுதி ) வரை தார்சாலை அமைத்தல். | 8.35 | எம். பொன்னுசாமி<br><br>கே. ஜெயராமன் | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.92 % அதிகம் |
| 3 | 1–வது வார்டு அங்காளம்மன் கோவில் தெருவில் தார்சாலை அமைத்தல் | 9.00 | எம். பொன்னுசாமி<br><br>கே. ஜெயராமன் | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.92 % அதிகம் |
| 4 | 1–வது வார்டு இடுகாடு செல்லும் பாதையில் தார்சாலை அமைத்தல் | 9.00 | எம். பொன்னுசாமி<br><br>கே. ஜெயராமன் | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.92 % அதிகம் |

**அலுவலக குறிப்பு : –** குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். பொன்னுசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.

**ந.க.எண். 1333/2019/இ1**

21.11.2019 | 427

**பொருள் எண். 6**

துவாக்குடி நகராட்சி பகுதியில் பொது நிதி 2019–20 –ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 15.11.2019–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக் கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|

**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>5–வது வார்டு ராவுத்தாண்மேடு மடத்தான்குளம் தெற்கு பகுதியில் தார்சாலை அமைத்தல்.</td><td>7.75</td><td>எம். பொன்னுசாமி<br><br>கே. ஜெயராமன்</td><td>மதிப்பீட்டை விட 0.13 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.92 % அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>5–வது வார்டு ராவுத்தாண்மேடு மடத்தான்குளம் தெற்கு பகுதியில் சிறுபாலத்துடன் மழைநீர் வடிகால் கட்டுதல்.</td><td>5.00</td><td>எம். பொன்னுசாமி<br><br>கே. ஜெயராமன்</td><td>மதிப்பீட்டை விட 0.11 % குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.86 % அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலக குறிப்பு : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எம். பொன்னுசாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.<br><br>ந.க.எண். 1333/2019/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>21.11.2019</td>
<td>428</td>
<td><u>பொருள் எண். 7</u><br>துவாக்குடி நகராட்சிப்பகுதியில் துவாக்குடி மலை தெற்கு பகுதியில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம் இயங்கி வரும் அங்கன்வாடி மைய கட்டிடம் மழையினால் மிகவும் சேதமடைந்து உள்ளதால் மேற்கண்ட குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தினை நகராட்சிக்கு சொந்தமான சுய உதவிக்குழு கட்டிடத்திற்கு மாற்றி கொள்ள அனுமதி கோரி குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், திருவெறும்பூர் வட்டாரம் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 669/2019/இ1</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>21.11.2019</td>
<td>429</td>
<td><u>பொருள் எண். 8</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான வாகனங்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தினக்கூலி அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை ( Out Sourcing ) முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து,ஓட்டுநர்கள் 01.11.2019 முதல் 31.10.2020 வரை வினியோகம் செய்வதற்கு 21.10.2019 ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதற்கு ஒப்பந்த வழிமுறைகளுடன் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ளனர். அவை பின்வருமாறு
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் விவரம்</td><td>ஒரு ஓட்டுநருக்கு நாள்</td><td></td></tr>
</table>
</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒன்றுக்கு பணி செய்வதற்கு ஊதியம் | |
| 1 | திரு.M.ஜீவானந்தம் 68,பர்மாகாலனி,திருவெறும்பூர்,திருச்சி-13 | 485/- | குறைவான விலைப்புள்ளி |
| 2 | திரு.R.சிவக்குமார், அய்யம்பட்டி ரோடு, திருச்சி | 500/- | |

இவ்விரு விலைப்புள்ளிகளில் திரு.M. ஜீவானந்தம், ஒப்பந்ததாரர் அளித்துள்ள புள்ளியானது குறைவானதாக இருந்தபோதிலும் திருச்சிராப்பள்ளி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வெளியிடப்பட்ட 2019-20 ஆண்டிற்கான தினக்கூலி சம்பளத்தை விட அதிகமாக உள்ளதால் திரு. M. ஜீவானந்தம் ஒப்பந்ததாரர் அவர்களிடம், ஆணையர், சுகாதார ஆய்வாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் மேலாளர் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு விலைகுறைப்பு செய்யப்பட்டது. அதனடிப்படையில், திரு.M ஜீவானந்தம் அவர்கள் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.460/- ஊதியத்தில் (EPF, ESI உட்பட்ட) ஓட்டுநர்களை அளிக்க கடித நாள். **21.10.22019–**ன்படி சம்மதம் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட ஊதிய தொகையானது மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்கள் நிர்ணயம் செய்த தினக்கூலியைவிட குறைவாக உள்ளதை ஏற்று மேற்படி ஒப்பந்ததாரர் மூலம் ஓட்டுநர்களை அமர்த்திக்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 1.** எம். ஜீவானந்தம், ஒப்பந்ததாரரின் சம்மத கடிதத்தினை தொடர்ந்து நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.460/- ஊதியத்தில் ( EPF, ESI உட்பட்ட) 01.11.2019 முதல் 31.10.2020 வரை ஓட்டுநர்களை விநியோகம் செய்வதற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.

**2. 01.11.2019** முதல் புதிய ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் ஊதியம் ஒரு நாளைக்கு **ரூ. 460/–** வீதம் ஒப்பந்ததாரருக்கு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 284 / எச்1 / 2019**

______________ X ______________